**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இல: 02/2019

இல:20, வோட் பிளேஸ்
கொழும்பு-07
2019.05.15

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்
வளாக அதிபர்கள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**திறைசேரி மானியங்கள் / சேகரிப்புக்கள் / உருவாக்கப்பட்ட வருமானம் / கருத்திட்டங்கள் மற்றும் இதர மானியக் கணக்குகள் ஆகியவற்றுக்காக பராமரிக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகளில் உள்ள மேலதிக / மிகைப் பணம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழக முறைமையில் உள்ள நடைமுறைக் கணக்குகளின் மேலதிக / மிகைப் பணம் தொடர்பில் பின்வரும் வழிமுறைகளைக் கையாண்டு நடைமுறைப்படுத்துவதற்கு 2019 ஏப்ரில் மாதம் 04 ஆந் திகதி இடம்பெற்ற அதனுடைய 1007 ஆவது கூட்டத்தொடரின் போது அனுமதியளிக்கப்பட்டது.

i. நிதியங்களானவை மிகவும் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் எதிர் வரும் மாதங்களில் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளுக்குரிய நிதியங்கள் நடைமுறைக் கணக்குகளில் எவ்விதப் பயனுமின்றி இருத்தல் ஆகாது.

ii. திறைசேரி நிதியம்: மாதாந்த நிதிப்பாய்ச்சல் கூற்று முன்கணிப்பானது உண்மை / மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவொரு மாதத்தினதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் மேலதிக அல்லது பயன்படுத்தப்படாத நிதியங்கள் அடுத்த மாதத்தின் நிதிப்பாய்ச்சல் கூற்றில் சரிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில், நிதியங்களானவை திறைசேரிக்கு உடனடியாக திருப்பியனுப்பப்படல் வேண்டும்.

iii. திறைசேரி மீண்டெழும் மற்றும் மூலதனக் கணக்குகள் உட்பட சகல நடைமுறைக் கணக்குகளும் இராக்கால முதலீட்டு உடன்படிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்படல் வேண்டும்.

iv. உரிய அனுமதியுடன் (நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளும் கவுன்சில் / முகாமைத்துவக் குழு அனுமதி ) சேகரிப்புக்கள் / உருவாக்கப்பட்ட வருமானம் / வேறு மானியங்கள் அல்லது ஒத்திவைக்கப்பட்ட மானியங்கள் / கருத்திட்டங்கள் மற்றும் இதர மானியக் கணக்குகள் குறுகிய கால முதலீடுகளுக்கு உரிய செயற்பாடுகளானவை செயற்பாட்டுக்கு வரும் வரை பரிமாற்றப்படல் வேண்டும்.

v. 2018.11.14 ஆந் திகதிய பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல 02/2018 இல் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப சகல முதலீடுகளும் அரச வங்கிகளில் மேற்கொள்ளப்படும்.

vi. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 11 இன் பிரகாரம் மற்றும் 2003.06.02 ஆந் திகதிய பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல PED இன் பிரிவு 8.2.2 இன் படி முதலீடுகளுக்கான அனுமதியானது பொதுத் திறைசேறியின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

vii. அத்தகைய எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகளுக்கான அனுமதியானது ஆண்டின் ஆரம்ப பகுதியில் பெற்றுக்கொள்ளப்படலாம்.

viii. எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் திறைசேறிக்கு மேலே சொல்லப்பட்ட (vi) உடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ix. பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல 02/2018 இன் பிரிவு 2 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிறுவகங்களிடமிருந்து வாய்ப்புக்கள் காணப்படும் பட்சத்தில் விலைமனுக்கான அழைப்பு விடுக்கப்படும்.

x. மேற்படி செயன்முறையுடன் தொடர்புடைய ஆவணங்கள் தனியான கோப்புகளில் பராமரிக்கப்படல் வேண்டும்.

தயவு செய்து அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

பேராசிரியர்.மொஹான் த சில்வா
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர், நகர்த் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வியமைச்சு
2. தலைவர் அலுவலகம், ப.மா.ஆ
3. உப தலைவர், ப.மா.ஆ
4. ப.மா.ஆ உறுப்பினர்கள்
5. செயலாளர், ப.மா.ஆ
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், ப.மா.ஆ
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள்
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள்- உயர்கல்வி நிறுவகம் / நிறுவகங்கள்
11. பிரதிப்பதிவாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள்-உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள், உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்- ப.மா.ஆ
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்கக் கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர்கல்வி நிறுவகங்களின் பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்
16. சகல தொழிற்சங்கங்களினதும் செயலாளர்கள்
17. கணக்காய்வாளர் நாயகம்

கோப்பு இல: ப.மா.ஆ / சி.ஐ.எ /எப் / உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை./ 1